நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி ... மன்றம்
யாழ்ப்பாணம்

முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 182 ஆங்கீரச வைகாசி 14 ( 27 . 05 . 1992 ) புதன்

★ சமசமாஜக் கட்சி கூறுகிறது

## இந்திய நோக்கம் புலிகளால் நிறைவேறாது என்பதால் தடை

விடுதலைப் புலிகள் மீது இந்தியா தடை விதித்தமைக்கு ஸ்ரீலங்கா இடதுசாரி கட்சியான சமசமாஜக் கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளது. இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்காக புலிகளை ஆதரித்த இந்தியா, தமது நோக்கம் புலிகளால் நிறைவேறாது என அறிந்து கொண்டதும் அவ் = 04ஆம் பக்கம் பார்க்க

# காங்கேசன் சென்ற லொறிகளை ராணுவத்தினர் திருப்பி அனுப்பினர்

### அபாய சமிக்கை காட்டப்பட்டது

நேற்றுக்காலை காங்கேசன்துறைக் களஞ்சியம் சென்ற லொறிகளை காங்கேசன் பகுதிக்கு வரவேண்டாம் எனக்கூறி படையினர் திருப்பியனுப்பிவிட்டனர். இதற்கான காரணம் ஏதும் படையினரால் தெரிவிக்கப்படவில்லை.

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்திற்கு நேற்று உணவுப் பொருள்களை ஏற்றச் சென்ற லொறிகள் உணவுப் பொருள்களை ஏற்றாமல் இடைவழியில் யாழ்ப்பாணம் திரும்பின.

உணவுப் பொருள்களை ஏற்ற வரவேண்டாம் என பலாலி இராணுவத்தினர் சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகளை பணித்ததாகவும் அத்துடன் இராணுவத்தினர் அபாய சமிக்கை விளக்கையும் காட்டியதை தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் மற்றும் லொறிகள் யாழ்ப்பாணம் திரும்பியதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

உணவுப் பொருள்களை ஏற்றுவதற்கு லொறிகளை அனுமதி வழங்குவதற்கு மறுத்தற்கான காரணம் பற்றி தெரியவில்லை என அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது. (47)

## ஐ. நா. அதிகாரிகளும் திரும்ப முடியாத நிலை

யாழ்ப்பாணம் வந்திருந்த ஐக்கியநாட்டு அகதிகள் தாபனத்தை சேர்ந்த இரு அதிகாரிகளும் நேற்று கொழும்புக்கு சென்ற பயணம் தடைப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரின் உதவியுடன் இவர்கள் கீரிமலை -சேந்தான்குளம் வீதியூடாக பலாலிக்கு செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்க மறுத்ததை தொடர்ந்து இவர்கள் மீண்டும் யாழ் திரும்பினர். 47

## அரிசி, மா விலை அதிகரிப்பு

அரிசி, மா என்பனவற்றின் விலை அதிகரித்துள்ளது.

அரிசி 1ரூ 80 சதத்தாலும் மா 35 சதத்தாலும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி அரிசி கிலோ 16. 60 சதமாகவும் மா 13. 60சதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

இவ்விலை உயர்வு நேற்றிலிருந்து அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது. 47

## படகுவிபத்தில் பலியான 9பேரின் சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மகிழடித்தீவில் விபத்தில் மூழ்கிய படகிலிருந்த பயணிகளில் 11பேர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

9 சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. முதலிக்குடாவைச் சேர்ந்த வே. சந்திரகுமார், கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த மா. மகேஸ்வரி, கு. கமலா, கு. வள்ளியம்மை, மு. சுகந்தினி, மு. ஜெயந்தினி, வை. அரங்கநாதன், செ. செல்லத்துரை, பா. கேதாராஜ் ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டவையாகும்.

## அதிரடிப்படை மீது அம்பாறையில் கண்ணிவெடி

அம்பாறையில் கடந்தவெள்ளியன்றும் ஞாயிறன்றும் விசேட அதிரடிப் படையினர் மீது புலிகள் கண்ணிவெடித் தாக்குதல்களை நடத்தினர்.

கடந்த வெள்ளியன்று இரவு அம்பாறை கண்ணகிபுர முகாமிலிருந்து ரோந்து சென்ற படையினர் கோணாவில பகுதியில புலிகளின் கண்ணிவெடியில் சிக்கினர். இழப்பை சந்தித்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறே பின்வாங்கிச் சென்றனர்.

கடந்த ஞாயிறன்று திருக்கோவில் பகுதியிலுள்ள சங்கமன்கண்டி குடிசாறு முகாமிற்கு ட்ரக்டரில் சென்ற விசேட அதிரடிப் படையினர் கண்ணிவெடியில் சிக்கினர்.

இதில் அதிரடிப்படை அதிகாரி பலியானார். இருபடையினர் காயமடைந்தனர். ட்ரக்டர் முற்றாக சேதமடைந்தது.

## யாழ்.மாவட்ட ஊரடங்கு

யாழ் மாவட்டத்தில் இன்று காலை 6மணிமுதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது.

## குமண வருவது தாமதம்

பருத்தித்துறை துறைமுகம் தற்போது வெறிச்சோடி இருப்பதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

கொழும்பில் இருந்து உணவுக்கப்பல்கள் வருவது சீராக இடம்பெறுவதில்லை என்றும் குமண கப்பல் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை துறைமுகத்துக்கு வருவதற்கு குறைந்தது இரண்டு வாரம் எடுக்கும் எனவும் அவ்வட்டாரம் மேலும் தெரிவித்தது. 47

## தொடர்ந்து கலிபர் தாக்கு

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து கடந்த நான்கு நாள்களாய் இராணுவத்தினர் தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை கரையோர பகுதிகளை நோக்கி — 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா நகரில் கடும் பாதுகாப்பு

வவுனியாவில் நாளை மறுதினம் ஆரம்பமாகும் 3நாள் ஜனாதிபதி நடமாடும் சேவை தொடர்பாக வவுனியா நகரம் பலத்த பாதுகாப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகரினுள் இன்று முதல் நுழையும் பொதுமக்கள் தம்முடன் அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லும்படி பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அடையாள அட்டையின்றி வருபவர்களை உடனடியாக கைது செய்யும்படியும் நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள காவல் நிலையங்களிலுள்ள படையினருக்கு பணிக்கப்பட்டுள்ளதாம்.

## ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஐ.நா. அறிக்கை ஆண்டு இறுதியில்

ஸ்ரீலங்கா மனித உரிமைகள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்று இவ்வருட இறுதியில் வெளியிடப்படவுள்ளது.

ஐ. நாவும், சர்வதேச மன்னிப்புச்சபையும் இந்த அறிக்கையை வெளியிடவுள்ளன.

இதனிடையே ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல்கள் குறைந்துவருவதாக ஸ்ரீலங்காவுக்கான புதிய அமெரிக்க தூதுவர் கூறியுள்ளார்.

## இடம்பெயர்ந்தவங்கிஊழியர் வவுனியாவுக்குவரவேண்டும்

வடபகுதி] இலங்கைவங்கிகளுக்கு பொறுப்பாக கொழும்பில் இயங்கும் இலங்கை வங்கி அலுவலகத்தை வவுனியாவுக்கு விரைவில் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் வட பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் குடும்பத்துடன் தங்கியுள்ள இலங்கை வங்கி ஊழியர்கள் வவுனியாவுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை இடம்பெயர்ந்த வங்கி ஊழியர்களில் சிலர் தீவுப்பகுதிக்கு அனுப்பப்படுவதாகவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. 06

## அகிலாவை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக விடுதலைப்புலிகளின் பெண்கள் புலனாய்வுப் பிரிவுத் தலைவி எனக்கருதப்படும் அகிலாவை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கை விசாரித்து வரும் சிறப்பு நீதிமன்றம் இந்த பிடியாணையை நேற்று பிறப்பித்தது.

## 'அப்பா என்னை காப்பாற்றுங்கள்' கடத்தப்பட்ட இளைஞன் கடிதம்

[வங்கி முகாமைப் பயிற்சி பெற்று வந்த நாவலப்பிட்டியைச் சேர்ந்த நிமல் காரியவாசம் என்ற பெயருடைய இளைஞர் சீருடையணியாத குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலிசார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

'அப்பா என்னை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்தித்துக் காப்பாற் — 4 ஆம் பக்கம் பார்க்க

## சினைப்பர் தாக்கு

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று முன்தினம் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் இப்பாய் ஒருவர் பலியானார்.

# இந்திய-பாகிஸ்தான் பேச்சுகளை இந்தியா முறித்துக்கொண்டது

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வெளியுறவு செயலர்களிடையிலான 6ஆவது சுற்று பேச்சுவார்த்தை நடைபெறாது என இந்தியா திடீரென அறிவித்துள்ளது.

இந்தியராஜதந்திரி மீட்டல பாகிஸ்தானிய உளவுப்படையினரால் கடுமையாக தாக்கப்பட்டமையே இந்த புதிய அறிவிப்பிற்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்துத்தெரிவித்த இந்திய வெளியுறவுப் பேச்சாளர் மீட்டல தாக்கப் — 4 ஆம் பக்கம் பார்க்க

# 5 தமிழ் பொறியியலாளர்கள் பஞ்சாப்பில் சுட்டுக் கொலை!

பஞ்சாப்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐந்து தமிழ்ப் பொறியியலாளர்கள் சீக்கிய தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வட இந்திய மாநிலமான பஞ்சாப்பில் சீக்கியர்கள் அல்லாதோரை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை சீக்கியத் தீவிரவாதிகள் தீவிரப்படுத்தியுள்ளதன் எதிரொலியாகவே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சில மாதங்களுக்கு முன்னரும் பஞ்சாப்பில் பிற மாநிலங்களைச் சேர்ந்த 7 பொறியியலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர் அவர்களில் ஒருவர் தமிழர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ‘அகதிகள் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்’

புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையினால் தமிழ்நாட்டில் வாழும் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் எதுவிதத்திலும் துன்புறுத்தப்படாமலிருப்பதை மத்திய அரசு உறுதி செய்துகொள்ள வேண்டுமென இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி கேட்டுள்ளது.

புலிகள் மீதான தடையை ஈழ அகதிகள் மீதும் தமிழக அரசு தவறாகப் பயன்படுத்தலாமென்ற அச்சம் நிலவி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பெருமாளுக்கு விருந்து புலிகளுக்கு மட்டும் தடையா?

### - வீரமணி

“ஈழத் தமிழர்கள் அனாதைகள் ஆக்கப்படக் கூடாது. காலம் இதற்குத் தெளிவான பதிலை அளிக்கும்” என்று திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி. வீரமணி கூறியுள்ளார்.

வரதராஜப் பெருமாள் போன்ற ஒழுக்களை இங்கே விருந்தினர்களாக வைத்து இந்திய அரசு உபசரித்துக் கொண்டு விடுதலைப்புலிகளுக்கு தடை என்ற நடவடிக்கை பாரபட்சம் ஆகாதா? என்றும் அவர் வினவினார்.

## ராஜீவ் கொலை வழக்கு நீதிபதிக்கு பலத்த பாதுகாப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரணை செய்யும் சென்னை தனி விசேட நீதிமன்றத்தின் நீதியரசருக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

நீதிபதியின் உத்தியோக பூர்வ பங்களா அமைந்துள்ள பகுதியைச் சுற்றி இரவு பகலாக பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## கட்டுநிதி வந்து சேர்ந்தது

மே மாதத்துக்குரிய யாழ். மாவட்ட ஆசிரியர்களினதும் பாடசாலையில் கடமையாற்றும் ஊழியர்களினதும் சம்பளத்தை வழங்குவதற்குரிய கட்டுநிதி வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சிலிருந்து யாழ். பிரதேச கல்விப்பணிமனைக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ‘அதிகார பரவலாக்கல் விரைவில் பூர்த்தியாகும்’

அதிகாரப் பரவலாக்கல் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாக்கப்பட்டு விடும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

‘அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் அனைத்தும் பத்திரிகைகளில் வெளி வருவதுடன் மட்டும் நின்று விடுவதில்லை, அவை மக்களுடைய இதயங்களையும் சென்றடைவதாக இருக்க வேண்டும்’ எனவும் அவர் தெரிவித்தார்.

## படகு விபத்தில் பலியானோரில் எழுவர் பெண்கள்

கொக்கட்டிச் சோலையில் கடந்த ஞாயிறு மாலை இடம் பெற்ற படகு விபத்திற்கு அளவுக்கு மிஞ்சிய பயணிகளை அப்படகில் ஏற்றியமையே காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படகு விபத்தில் 16 பேர் வரையில் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இறந்தோரில் எழுவர் பெண்களாவர்.

மண்முனைத் துறையிலிருந்து வாவிக்கு அப்பாலுள்ள படுவான்கரை பிரதேசத்திலுள்ள மகிழடித்தீவுக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் படகே இந்த விபத்தில் சிக்கியது.

மகிழடித் தீவுப்பகுதியைச் சேர்ந்த இவ் விவசாயிகள் மண்முனைப் பகுதிக்கு வந்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்கையிலேயே இப்பரிதாப மரணத்திற்கு உள்ளானார்கள்.

## கொழும்பில் காலமானார்

வானொலி சிவஞானம் (67) கடந்த ஞாயிறு தெஹிவளையில் காலமானார் இவர் பிரபல கலைஞரும், பழம்பெரும் ஒலிபரப்பாளருமாவார்.

## நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் ஆங்கிலத்தில்

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரணை செய்யும் சென்னை தனி விசேட நீதி மன்றத்தின் நடவடிக்கைகள், சாட்சிகளின் பதிவு அனைத்தும் ஆங்கிலத்திலேயே இருத்தல் வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நீதி மன்ற நடவடிக்கைகள் தமிழ் மொழியிலேயே இருத்தல் வேண்டுமென்று சட்டம் உள்ளது. அதன்படியே அங்கு எல்லா வழக்குகளும் நடைபெற்று வருகின்றன. ஆனால் தனி விசேட நீதி மன்றத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் தனி ஆங்கிலத்திலேயே அமைதல் வேண்டுமென பணிக்கப்பட்டிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் ராஜீவ் கொலை வழக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாலும், வழக்கு விசாரணையின் ஆவணங்கள் யாவும் மேல் நீதி மன்றம் வரை செல்ல வேண்டியிருப்பதுமே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தைநடத்தக்கூடாதாம்

‘வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் ‘பாரம்பரிய தாயகம்’ என்று தமிழ் மக்கள் உரிமை கோருவதையும் சிங்கள மக்களுக்கு இங்கு உரிமைகள் இல்லையென்பதையும் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்’ என காமினி ஜயசூரிய தலைமையிலான சிங்கள பாதுகாப்பு அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் முஸ்லிம்களும் போர்த்துக்கீசியர்களால் துன்புறுத்தப்பட்ட காரணத்தினால் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மன்னர்களால் குடியேற்றப் பட்டவர்களே. எனவே அவர்களும் கிழக்கு மாகாணத்தில் வரலாற்று ரீதியாக வசித்தவர்கள் என்ற கருத்தும் உண்மைக்குப் புறம்பானது.

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு சிங்கள மக்கள் ஒரு போதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இம்மாகாணங்களின் இணைப்பு ரத்துச் செய்யப்பட வேண்டும். அதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கில் மட்டும் நடத்தப்படக் கூடாது நாடு முழுவதிலுமே நடத்தப்படவேண்டும்.

நிரந்தரமாக வடக்குக் கிழக்கை இணைக்கும் அடிப்படையிலான இனப்பிரச்சினை தீர்வையும் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

நேரடியாகவோ மறைமுகமாகவோ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் யூனியன் ஆதரவில் நோர்வேயில விளையாட்டு விழா

நோர்வேயில் ‘ஸார்பேர’ என்ற இடத்தில் உள்ள தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகத்தினரால் ஈஸ்டர் உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் வெகு சிறப்பாக நடந்தேறியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்போட்டித் தொடரில் இடம்பெற்ற உதைபந்தாட்ட கரபந்தாட்டப் போட்டிகளில் நோர்வியன் விளையாட்டுக் கழகம் உட்பட 25க்கும் மேற்பட்ட கழகங்கள் கலந்து கொண்டன.

இவற்றுள் உதைபந்தாட்டத்தில் பேர்டவியோஸ் ‘ஏ’ முதலாம் இடத்தையும் அதே கழகத்தின் ‘பி’ இரண்டாம் இடத்தையும் பெற்றன. கரப்பந்தாட்டத்திலும் முதலாம் இடத்தை பேர்டவியோஸ் கழகமும் இரண்டாம் இடத்தை ‘அஸ்ரா’ கழகமும் பெற்றன.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னைநாள் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி கே. ரூபமூர்த்தி, கல்வியும் விளையாட்டும் என்ற விடயம் பற்றி உரையாற்றினார். (16)

## இந்திய மத்திய அரசின் அரைவேக்காட்டு நடவடிக்கை

### -டாக்டர் ராம்தாஸ்

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் மத்திய அரசின் தீர்மானம் ஒரு அரைவேக்காட்டு நடவடிக்கையே என தமிழக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் வர்ணித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தடைவிதிக்கப்பட்டு, அவர்களுக்கு எந்த விதத்திலும் ஆதரவளிக்கும் எந்த அமைப்பும் தடைசெய்யப்படுமென மத்திய அரசு எச்சரித்துள்ள போதிலும் பாட்டாளி மக்கள் கட்சி விடுதலைப் புலிகள் இயக்கத்தை தொடர்ந்தும் பகிரங்கமாக ஆதரித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தட்சருக்கு எதிராக லண்டன் நீதிமன்றில் வழக்கு

முன்னைநாள் பிரதமர் தட்சருக்கு எதிராக லண்டன் நீதிமன்றில் சம்பந்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அவர் செய்த குற்றம் தேர்தல்வரி எனப்படும் ஒரு சிறு தொகையைக் கட்டத் தவறியதே.

‘இந்தக் குற்றத்தை நான் வேண்டும் என்று செய்யவில்லை எனது உதவியாளர்களின் கவனயீனமே இதற்கு காரணம், கட்ட வேண்டிய பணத்துடன் அதற்குரிய தண்டப் பணத்தையும் சேர்த்து கட்டுகிறேன்’ என்று தட்சர் கொடுத்த மனுவை அரசு நிராகரித்து விட்டது.

நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இனி இவ் விவகாரம் தொடர்பாக நீதிமன்றின் தீர்ப்பிற்கு அமையவே தம்மால் நடவடிக்கை எடுக்க முடியும் என்று அரசு கூறியுள்ளது. 16

## பிறந்ததின விழா

யோகாசனக் கலாநிலயமும், அகில இலங்கை சர்வமத யோகாசன நிலையத்தின் இயக்குனருமான சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதியின் 80 ஆவது பிறந்ததின விழா அகில இலங்கை சர்வமத யோகாசன நிலையத்தினரால், 31 5 1992 ஆம் திகதி காலை 10 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இவ் விழாவில் பல யோகாசன நிபுணர்களின் ஆசியுரையும், பண்ணிசைப் புலவர் திரு. வே. சிவஞானம் அவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

## சிரேட்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பதவியுயர்வு பற்றி ஆட்சேபம்

நான்கு சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர்களுக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவியுயர்வு வழங்கியது தொடர்பாக ஆட்சேபனை எழுப்பப்பட்டுள்ளது.

பதவியுயர்வு பெற்றவர்களில் ஒருவர் சிரேஷ்டத்துவத்தில் முதலிடத்தையும், இன்னொருவர் ஆறாவது இடத்தையும் ஏனைய இருவரும் சிரேஷ்டத்துவத்தில் மிகவும் குறைந்த நிலையிலே உள்ளவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வீடமைப்புத்திட்டம்

வவுனியாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சகாயமாதாபுர எழுச்சிக் கிராமத்தை இம் மாதம் 29 ஆம் திகதி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன குரே திறந்து வைக்கவுள்ளார்.

80 வீடுகள் இந்தத் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

Bata பாட்டா

வடபகுதி மக்களின் நலன் கருதி தற்போது
வவுனியா நகரில்
மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது
25% விசேட கழிவு உண்டு

உங்கள் தேவைகளுக்கு
பாட்டா மொத்த விற்பனை நிலையம்

இல. 35, மில் றோட், வவுனியா
இல. 30, குமார வீதி, கொழும்பு-11

05044

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

# வீடு கட்டுவதற்கான அரசின் நிவாரணம்

வீடு கட்டுவதற்கு வசதியில்லாத வறிய மக்களுக்கு வீடு கட்டுவதற்கு நிவாரணம் வழங்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை தொடர்பான அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிவாரணம் அரசின் 15 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1992 இல் செயற்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி நிவாரணத்திட்டத்திற்கு அமைய கீழ்க்காணும் தரத்தில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

- ☐ நீண்டகாலமாக சேதமடைந்த வீடுகளில் வசிப்பவர்கள்
- ☐ பாதையோரங்களில் உள்ள குடிசைகளில் வசிப்பவர்கள்.
- ☐ ஆதரவற்ற அனாதைகள்.
- ☐ இயற்கை அனர்த்தங்களினால் சேதமாக்கப்பட்ட வீடுகளில் வசிப்போர்கள்.
- ☐ பிரதான உழைப்பாளி இறந்ததாலோ அல்லது நீண்டகால நோயினால் பீடிக்கப்பட்டதாலோ எதுவித ஆதரவுமற்றவர்களாக இருக்கப்பட்டவர்கள், எதுவித ஆதரவுமற்ற வறிய குடும்பங்கள் வசிக்க வீடு இன்றி இருப்பின் அத்தகைய குடும்பங்கள் நிவாரணம் பெறுவதற்கு இனங்காணப்படல் வேண்டும்.

## குறிக்கோள்

வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு நிவாரணம் அளித்து வறுமையை அகற்றல்.

## முன்னுரிமை

அனாதைகளாக்கப்பட்டு வசிக்க வீடு இல்லாது அவதிப்படும் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## செயற்திட்டம்

- ☐ இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 'குடும்ப விவரப் பதிவேடு' தயாரிக்கப்படும்.
- ☐ தகுதியுள்ள குடும்பங்கள் இனங்காணப்பட்டு மேற்கூறப்பட்ட பதிவேட்டில் பதிவு செய்யப்படும்
- ☐ சன சமூக நிலையங்கள் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள் போன்ற பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் தகுதியுள்ளவர்களை இனங்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
- ☐ தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா ஐயாயிரம் பிரதேச சபைகளில் வதியும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும். ரூபா 8,500 மாநகர சபை அல்லது நகரசபைப்பகுதியில் வதியும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும் நிவாரணமாக இரண்டிற்கு மேற்பட்ட தவணைகளில் பிரித்து வழங்கப்படும்.
- ☐ தெரிவுகள் பற்றி பொதுமக்கள் தமது ஆட்சேபனைகளை தெரிவிப்பதற்கு பொது விளம்பரப்பலகைகளில் இவை காணப்பட்ட குடும்பங்களின் விவரங்கள் அக்குடும்பங்களின் அமைவிடங்கள் பற்றிய விவரத்துடன் 14 நாட்களுக்குள் இடம்பெறும்.
- ☐ தெரிவு பற்றிய பொதுமக்களின் ஆட்சேபனைகள் எந்தக் கட்டத்திலும் வரவேற்று ஏற்றுக் கொள்ளப்படும்.

★ ராஜேஷ் தாக்குதல் பற்றி அவதானிகளின் கருத்து

# இந்தியாவுடனான உறவு வளர்வதை பாக். உளவுத்துறை விரும்பவில்லை

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்குமிடையிலான அடுத்த சுற்று வெளியுறவுச் செயலர்கள் நிலையிலான பேச்சுக்களை இரத்துச் செய்யுமாறு பாரதிய ஜனதாக்கட்சி இந்திய மத்திய அரசைக் கோரியுள்ளது.

இஸ்லாமாபாத்தில் இந்திய தூதரக அதிகாரி ராஜேஷ் மிட்டல் பாகிஸ்தான் உளவுப் பிரிவினால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையிலேயே இப்பேச்சுக்களை இரத்துச் செய்யுமாறும் பாரதிய ஜனதாக் கட்சி கேட்டுள்ளது.

இச் சம்பவத்தின் மூலம் ராஜீவத் துறையினர் பாதுகாப்புக்கான வியன்னாக் கோட்பாட்டை பாகிஸ்தான் மீறிவிட்டதென்றும் அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை இச் சம்பவம் குறித்து பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

ராஜேஷ் மிட்டல் தாக்கப்பட்ட சம்பவம் பாகிஸ்தான் உளவுப் பிரிவினருடன் முற்றிலும் சம்பந்தப்பட்டதெனவே அவதானிகளால் கருதப்படுகின்றது.

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்குமிடையே உறவு நிலை மேம்படுவதை பாகிஸ்தான் உளவுப் பிரிவு விரும்பவில்லையெனவும், இச் சந்தர்ப்பத்தில் அடுத்தவாரம் புதுடில்லியில் இந்திய-பாகிஸ்தானிய வெளியுறவுச் செயலர்களின் சந்திப்புக்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்ததால் இந்திய விரோத தன்மையுடைய இவ் உளவு அமைப்பு அதனை குழப்பும் நோக்குடன் இவ்வாறு நடந்து கொண்டிருந்திருக்கலாமெனவும் அவதானிகளால் கருதப்படுகிறது.

# சிவாஜி சபதம்; காவிரிநீர் கிடைத்தாலே தாடி எடுப்பேன்

''தமிழகத்திற்கு காவிரிநீர் கர்நாடகாவினால் வழங்கப்பட்டால் தான் நான் வளர்க்கும் தாடியை எடுப்பேன்'' என்று தமிழக ஜனதாதள் தலைவர், நடிகர் திலகம் சிவாஜி கணேஷன் சிதம்பரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறுகிறார்.

'ஆனால் என் மகன் பிரபு கர்நாடக அரசு நீர் தரப்போவதுமில்லை, நீங்கள் தாடியை வழிக்கப்போவதுமில்லை என்கிறான். ஜெயலலிதா இது விடயத்தில் மீண்டும் நீதிமன்றத்திற்குச் செல்வது சரியா? காங்கிரஸ் காரரோடு நட்பு வேண்டுமா அல்லது தமிழகத்திற்கு நீர் வேண்டுமா என்பதை அவர் முதலில் முடிவு செய்ய வேண்டும்'' என்று சிவாஜி கணேஷன் மேலும் சொன்னார். சிதம்பரம் நிகழ்ச்சியில் சிவாஜி வந்து கொண்டபோது அவரது ரசிக பக்தர்களில் சிலர் அவர் காலில் விழுந்தனர், அப்போது ஆத்திரமடைந்த அவர், 'இப்படியெல்லாம் காலில் விழாதீர்கள், இது எனக்குப் பிடிக்கவில்லை. இதுவே பழக்கமாகிவிட்டால் யாராவது காலில் விழமாட்டார்களா என்று ஒரே ஏக்கமாகிவிடும்'' என்றார்.

# வவுனியா நகரில் பாதுகாப்பு வலயங்கள்

ஜனாதிபதி இடம்பெயர் சேவை இடம்பெறவுள்ளதையடுத்து வவுனியா நகரில் பாதுகாப்பு வெகுவாக பலப்படுத்தப்பட்டிருக்கிறது

அங்கு பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு விதிகள் கடுமையாக அமுல் செய்யப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புப் படையினரின் "பாஸ்" அனுமதியின்றி வவுனியா நகரப் பகுதியில் நடமாடுவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் வடக்கை நோக்கி வந்த வாகனங்கள் எதுவும் வவுனியா நகருக்குள் புக அனுமதிக்கப்படவில்லை.

# தேர்தல் நடத்த நிர்ப்பந்தம் செய்ய எதிர்க்கட்சிகள் முயற்சி

விரைவில் தேர்தல் நடத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கான உத்திகளை திட்டமிடுவதற்கென நடவடிக்கைக் குழுவொன்றை எதிர்க்கட்சிகள் நியமித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக்கட்சி டீ.ஜே.வி.பி ஆகிய ஆறு கட்சிகள் சென்ற வெள்ளியன்று நடத்திய கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏனைய எதிர்க்கட்சிகளையும் இந்த நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

# தெரிவுக்குழுவை இயங்கவைக்க சபாநாயகர் முயற்சி

இனப்பிரச்சினை தீர்வுக்கான வழிவகைகளை கண்டு அவற்றைப் பரிந்துரைப்பதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவை மீண்டும் கூட்டி அதனைச் செயற்பட வைப்பதற்கான முயற்சியில் சபாநாயகர் மொகமட் ஈடுபட்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

தெரிவுக்குழுவின் தலைவரான களுத்துறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் மங்கள முனசிங்கவை இது தொடர்பாக சபாநாயகர் நேற்று முன்தினம் காலை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

# பஸ் சாரதிகளாக பெண்களும் நியமனமாவர்

விரைவில் இலங்கையில் பெண்களும் பஸ் சாரதிகளாக நியமிக்கப்படவுள்ளனர்.

பெண்களை சாரதிகளாகவும், நடத்துநர்களாகவும் நியமிப்பதற்காக மேல் மாகாண சபை திட்டமொன்றை தயாரித்துள்ளது.

# இலங்கையில் மனித உரிமைபற்றி அமெரிக்கத் தூதுவர் அறிக்கை

இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் முழுமை காண இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளதாக இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் திருமதி டெரிஸிரா சாபர் தெரிவித்துள்ளார்.

திருமதி டெரிஸிரா சாபர் தற்பொழுது அமெரிக்க இராஜாங்க இலாகாவின் பிரதி உதவிச் செயலாளராக பதவி புரிந்து வருகிறார்.

இவர் 'இலங்கையின் மனித உரிமை' என்னும் விடயம் பற்றி அமெரிக்க இராஜாங்க இலாகாவுக்கு அண்மையில் சமர்ப்பித்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# 800 பேருக்கு நிரந்தரநியமனம்

அம்பாறை மாவட்டத்தில் 800 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# நோர்வே, யாழ். பல்கலைக்கழகங்கள் இணைந்து செயற்படத் தீர்மானம்

யாழ். பல்கலைக்கழகம் நோர்வே - தொரம்சோ பல்கலைக்கழகத்துடன் ஒருமித்து இணைந்து நடைமுறைப்படுத்தக்கூடிய ஆய்வு, அபிவிருத்தி பற்றிய ஒப்பந்தமொன்றைச் செய்வதற்கு தொரம்சோ பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் எடுத்த முயற்சியின் பேரில், யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அண்மையில் நோர்வேக்கு சென்றிருந்தார்.

இது தொடர்பான கருத்தரங்கொன்றிலும் பேராசிரியர் துரைராஜா நோர்வே பல்கலைக்கழகத்தில் கலந்து கொண்டார். உபவேந்தர் திரு. அ. துரைராஜா யாழ். பல்கலைக்கழகத்தில் தற்போது அமைக்கப்பட்டு வரும் விவசாய பீடத்தின் அவசியத்தையும் மேற்கொண்டு சிறப்பாக இயங்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் அங்கு எடுத்துரைத்தார். யாழ்ப்பாணத்தில் இயற்கையாகப் பெறப்படும் மூலப்பொருள்களை (காற்றுசக்தி, சூரியசக்தி, இயற்கை வாயு, பனைவளம்) போன்றவற்றைப் பயன்படுத்த ஆராய்ச்சிகள் நடைபெறுவதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

மீன்வளத் துறைக்கான பீடம் எதிர்காலத்தில் பயன்படக்கூடிய தேவைகளையும்; குறிப்பாகத் தொரம்சோப் பல்கலைக்கழகத்துடன் இவ்விடயத்தில் கூட்டாக ஆய்வு வேலைகள் நடத்துவது பற்றியும் ஆராயப்பட்டது. மேலும் திரு துரைராஜா அவர்கள் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் பங்களிப்பைப் பற்றியும் குறிப்பிட்டார். யாழ். பல்கலைக்கழகத்தில் பல பேராசிரியர்கள் மாணவர்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டு நாட்டைவிட்டு வெளியேறாமல் பணியாற்றி வருவதையும் அங்கு சுட்டிக் காட்டினார்.

அத்தோடு பல்கலைக்கழகம் திறவவுள்ள அச்சுக்கூடம் பற்றியும் கூறினார். இதற்கு ஏற்படும் சகல செலவுகளையும் வடநோர்வேயிலுள்ள தமிழர்கள் பொறுப்பேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தொரம்சோ பல்கலைக்கழக வேந்தர் டன்வோக்ஸ் அவர்களுடன் பேராசிரியர் துரைராஜா அவர்கள் இருபல்கலைக்கழகங்களும் இணைந்து செயற்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய பிரயோசனங்களை ஆராய்ந்தார். அத்தோடு இருபல்கலைக்கழகங்களுக்கும் இடையே மாணவர், விரிவுரையாளர்கள் பரிமாற்றம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இருவரும் இது தொடர்பாக விரைவில் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

# சுவிஸ் பிரஜையின் மனைவி வேலையிலிருந்து நிறுத்தம்

நவீன ஆயுதங்களை தமது வீட்டில் பதுக்கி வைத்திருந்ததற்காக ஜா எலயில் கைது செய்யப்பட்ட சுவிஸ் பிரஜையின் மனைவி அவர் சேவையாற்றிய வெளிநாட்டு வங்கியால் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை - தமிழ் பெற்றோர்களின் மகளான இவர் இவ் வங்கியில் இரண்டு வருடங்கள் முகாமையாளரின் அந்தரங்க உதவியாளராக கடமையாற்றினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாதெனவும் அறியப்படுகிறது.

## நுண்கலை மன்றப் பரீட்சை முடிவுகள் வெளியாகின

வட - இலங்கை நுண்கலை மன்றப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. நான்காம் தரத்திலே இரண்டு மாணவர் இரண்டாம் பிரிவிலும் 18மாணவர்கள் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றுள்ளனர். மூன்றாம் தரத்திலே இரண்டு பேர் முதலாம் பிரிவிலும் 10பேர் இரண்டாம் பிரிவிலும் 53 பேர் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றனர்.

இரண்டாம் தரத்திலே 2பேர் முதலாம் பிரிவிலும் 63பேர் இரண்டாம் பிரிவிலும் 44பேர் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றனர்.

முதலாம் தரத்தில் 11பேர் முதலாம் பிரிவிலும் 15பேர் இரண்டாம் பிரிவிலும் 77பேர் சாதாரண தரத்திலும் சித்தி பெற்றனர் என யாழ் கல்வித் திணைக்கள பரீட்சை பகுதி அறிவித்துள்ளது. 47

## ஜப்பான் தொழில்நுட்ப புலமைப்பரிசில் விண்ணப்பம்

ஜப்பானில் தொழில் நுட்ப டிப்ளோமாவிற்கான இரு புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1990ஆம் 1991ஆம் ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பாடங்களுக்குத் தோற்றி ஆகக்குறைந்த திரட்டுப்புள்ளியாக 240 ஐக் கொண்டவர்களும் க.பொ.த. சாதாரண பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி கொண்டவர்களுமான விண்ணப்பதாரிகள் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் 1993-04-01 ஆம் திகதியன்று 17வயதுக்கு குறையாமலும் 22வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என ஜப்பானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 06

## யாழ் ஆஸ்பத்திரி மின் விநியோகம் பாதிக்கப்படும் நிலை

அண்மையில் கம்பலிலிருந்து எடுத்துவரப்பட்ட டீசல் விநியோகம் யாழ்வைத்தியசாலையில் முடியும் கட்டத்தை நெருங்கியுள்ளதனால் யாழ் வைத்தியசாலையில் மின்சார விநியோகம் முழு அளவில் செயலிழக்கும் நிலையில் உள்ளது.

இது சம்பந்தமாக டீசலைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நிர்வாகத்தினர் நேற்று நாடியிருந்தனர் முயற்சி கைகூடாமல் போகவே செயலக நிர்வாகத்தினரிடம் டீசல் உதவியை நாடிய போது அவர்களும் கைவிரித்து விட்டனர்.

இதனால் டீசல் முடிந்த நிலையில் டீசல் ஜெனரேட்டர்கள் இயங்க முடியாது வைத்தியசாலையின் முக்கிய பகுதிகளான சத்திரசிகிச்சைப் பகுதி அதிதீவிர சிகிச்சைப் பகுதிகள் பாதிக்கப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. 07

## இடம்பெயர்ந்தோர்க்கு உணவு விநியோக நிறுத்தம்

அம்பாறை மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வாஞ்சிகுடி உதவி அரச அதிபர் பிரிவில் அகதிகளாக தங்கியுள்ள நூற்றுக்கு மதிகமான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவந்த உணவு நிவாரண உதவிகள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் இக்குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாகவும் குழந்தைகள் பாலுணவுஇன்றி அவதிப்படுவதாகவும் மட்டு - அம்பாறை புனர்வாழ்வு சபை தலைவர் முறையிட்டுள்ளார்.

## பயிற்றப்பட்ட ஆசிரியர்க்கு விரைவில் நிரந்தர நியமனம்

தற்போது பயிற்றப்பட்டு வேலையற்றிருக்கும் ஆசிரியர்கள் திருமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, அனுராதபுரம், அம்பாறை, மொனறாகலை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச பாடசாலைகளில் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கு ஒய்வூதியமுடைய அரசாங்க சேவை நியமனம் வழங்கப்படவுள்ளது.

---

அப்பா...

றுங்கள்" எனக் கூறி இந்த இளைஞர் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து அவரது தந்தைக்கு அனுப்பிய கடிதமும் பொலிஸாரின் பொறுப்பில் உள்ளது.

## ஐவருக்கு பொய் நியமனங்கள் வழங்கிய பதினைந்து பேர் கைது

ஒப்வு நாள்களில் இரகசியமாக நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து ஒரு நியமனத்துக்கு பதினோராயிரம் ரூபா வீதம் பெற்றுபொய்நியமனங்கள் வழங்கப்பட்டதாகக்கூறப்படும் அரச அதிகாரிகள் பதினைந்துபேரும் அந்த நியமனங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் எனக் கூறப்படும் ஐந்துபேரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொய் நியமனங்கள் வழங்கிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் ஒன்பது பேர் எழுதுவினைஞர்கள் என்றும் ஒருவர் பொறியியலாளர் என்றும் கூறப்படுகிறது.

இந்த நியமனங்கள் பொது நிர்வாக, மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒன்றிணைந்த சேவைகள் பிரிவினாலேயே வழங்கப்பட்டதாகவும், விவசாய சேவை, சமூகநல சேவை, நில அளவை திணைக்களங்களில் எழுதுவினைஞர் பதவிகளுக்கே பொய்யான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக பொலிஸ் தலைமையகம் மேல் விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

## படையினர் போரைத் தொடர மேலும் ஆயுதங்கள் தேவை!

புலிகளுக்கு எதிரான போரை மேற்கொள்ள படையினருக்கு தேவையான ஆயுதங்கள் வாங்க அரசு ஒதுக்கியுள்ள நிதியை மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் குறிப்பிட்டன என ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீடு படையினருக்கு தேவையான கவசத் தளபாடங்களையும் வெடி மருந்துகளையும் கொள்வனவு செய்யவே தேவையாகவுள்ளது.

பொருள்களுக்கான பாதுகாப்பு வரியை அரசு அண்மையில் 3 வீதமாக அதிகரித்ததன் மூலம் கிடைக்கும் பணத்தில் பெருந்தொகைப் பங்கு ஆயுதம் மற்றும் வெடி மருந்துகளுக்கே தேவையாகவுள்ளதாம்.

இதன்மூலம் பெறப்படும் ஆயுதங்களில் பெரும்பகுதி தரைப்படையினரின் முன்னணிப் பிரிவினர் உபயோகிக்கவே வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பெரியளவிலான கலிபர் வெடிபொருள்களை உபயோகிப்பதை படையினர் குறைத்து வருவதாகவும் இவை அதிகவிலைபிடிப்பதும் கொள்வனவு செய்வதில் உள்ள சிரமமுமே இதற்கு காரணம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்களில் கூறப்படுகிறது.

---

தொடர்ந்து.

மேற்கொள்கின்றனர்.

நேற்று தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

ஹெலி ஒன்று அடிக்கடி இவ்இராணுவ முகாமை வந்து வட்டமிட்டு செல்வதையும் காணமுடிந்தது. 47

---

இந்திய...

பட்டமை குறித்து பாகிஸ்தானின் சரியான பதிலை எதிர்பார்த்து கடந்த 36 மணித்தியாலங்களாகக்காத்திருந்தோம் ஆனால் பாகிஸ்தான்எதுவுமே தெரிவிக்கவில்லை என்றார்.

இரு நாடுகளின் உறவுகள் பாதிக்கப்படும் வகையிலேயே பாகிஸ்தான் நடந்து கொள்வதாகவும் அவர் குற்றஞ் சுமத்தினார்.

தாக்கப்பட்ட இந்தியராஜதந்திரியை விசேட விமானம் மூலம் வைத்திய நிபுணர்களின் உதவியுடன் இந்தியா கொண்டுவர தற்போது இந்தியா முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மிட்டலின் உடல் நிலை தொடர்ந்தும் மோசமாகவே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே நேற்று டில்லியில் உசகிஸ்தானிய தூதரகம் முன் சில அரசியற் கட்சிகள் பாகிஸ்தானுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தின. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

---

இந்திய நோக்கம்...

வமைப்பை தடைசெய்துள்ளது. இத்தடையினால் புலிகள் வீரர்கள் போலிந்து தோன்றக்கூடும் ஸ்ரீலங்கா அரசின் திறமையின்மையும் தடுமாற்றமுமே இனப்பிரச்சினை தீராமைக்கு காரணம் என அக்கட்சி தனது கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளது.

### புனர் வாழ்வுப் பிரிவு அறிவுறுத்தல்

## குடும்ப அட்டை பெறாதவர்கள் அலுவலகங்களில் சிரமப்படலாம்

யாழ்மாவட்டத்தில் நிரந்தரமாக வாழுகின்ற மக்களுக்கான குடும்பப் பதிவு அட்டைகள் யாவும் நிறைவு பெற்றமையினால் பொது மக்கள் தங்களுக்குரிய குடும்பப் பதிவு அட்டைகளை தங்கள் பிரிவு கிராமசேவையாளர்களிடமிருந்து பெற்று வைத்திருக்குமாறு யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி அறிவித்துள்ளது.

வெளிமாவட்டங்களில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து வந்த மக்கள் பற்றிய பூரண விவரத்தை ஒவ்வொரு கிராம சேவையாளர்களும் தமது பிரிவு உதவி அரசாங்க அதிபர் ஊடாக குடும்பப் பதிவு பிரிவுக்கு உடனடியாக அனுப்பி அதற்குரிய குடும்பப் பதிவு அட்டைகளைப் பெற்று இம்மாத இறுதிக்குமுன் அவர்களுக்கு விநியோகிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி, தொழில் நோக்கங்களுக்காக யாழ். மாவட்டம் வந்த தனிநபர் குடும்பங்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களது நிறுவனங்களின் சிபார்சுடன் தங்கள் பிரிவு கிராமசேவையாளரை சந்தித்து குடும்பப் பதிவு அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

31 05 92க்குப் பின் குடும்பப்பதிவு அட்டை பெறாதவர்கள் தங்களது தேவைகளுக்காக அலுவலகங்களை அணுகும்போது மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்குமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 06

### வாழ்க்கைச் செலவு வேதனம்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கை செலவுவேதனமான ரூபா 260 ஒய்வூதியர்களுக்கும் வழங்க வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்று மேல் மாகாணசபையின் அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வேதனம் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி ஒய்வூதியர் சங்கமும் கோரிக்கைவிடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### தாய்லாந்தில் எய்ட்ஸ்

தாய்லாந்தில் ஆறு லட்சம் பேர் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதுபற்றிக் கருத்து வெளியிட்ட இங்கிலாந்தைச்சேர்ந்த சர்வதேச குடும்ப சுகாதார டாக்டர் மைகல் பெரி ஆரம்பத்திலேயே உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பின் இவ்வளவாக நோயுற்றவர்கள் தொகை அதிகரித்திருக்காது என்றார்.

சிறிலங்காவில் கூட தகுந்த நேரத்தில் இந்த நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளாவிடில் எய்ட்ஸ் நோய் கடுதலாகப் பரவும் வாய்ப்புகள் உண்டு எனக் கூறினார்.

### இடம் பெயர்ந்தோர் அனுமதிஅட்டை

விஞ்ஞான கணித ஆசிரியர்கள் தெரிவுசெய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும்.

இப்பரீட்சையில் தோற்றுவதற்கு திவகம். காரைநகர் பகுதிகளிலிருந்து விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதி அட்டைகளை யாழ் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாமென கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 06

### சிகிச்சைக்கு மருத்துவகுழு

நேற்று முன்தினம் தமிழகத்தில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு என மூவர் கொண்ட மருத்துவர் குழுவொன்றை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

இதனிடையே இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட இருவரும் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### தனிச்சிங்கள கடிதங்கள்

கொழும்பில் உள்ள ஒய்வூதியத் திணைக்களம் தொடர்ந்தும் தனிச்சிங்களத்தில் தமிழ் ஒய்வூதியர்களுக்குக்கடிதங்களை அனுப்பிவருகின்றது. 06

---

## காலமானார்

### முத்துக்குமாரு நல்லையா

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு நல்லையா அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று 27-05-92 காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ந. தவராசா

நவாலி வடக்கு,
நவாலி.

05046

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில். உள்ள அச்சகத்தில் 27-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது